The "NAVEENA BHARATI" Reg. No. M.

நவம்பர்—1930.

# நவீன




8-DEC 1930

மாலை 2. மணி 11

M211, 29B1F
N30-211

ஓர் தேசிய

## மாதப் பத்திரிகை

இனிமையும் அழகும் கருத்தும்
விஷயமும் பொதிந்தது.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

# போஷகர்கள்.

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா
எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர்,
ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார்,
சித்தயன்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்ல

10. ,, ஜான் அந்தோனி ஆஜு அவ
பைசன்வாலி, தேவிகுள

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

8 - DEC 1930

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன் தார், முனிசிபல் சேர்மன் & M. L. C., போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக்கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷிமிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

19. ,, ஆ. ஆத. இராமனாதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O., தேவகோட்டை.


20. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.

21. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

நவீன




படங்களுடன் வெளிவந்துலாவும் தேசீய மாலிகை

மாலை 1. மணி 1.

## பொருள் அடக்கம்.


தொடர் எண். பக்கம்.

1. "பாரதி"யின் புனர் ஜனனம்—ஆசிரியர், "நவீன பாரதி" 1
2. இந்து முஸ்லீம் ஒற்றுமை—ஸ்ரீமான் **C. A.** பெருமாள் அவர்கள் ... 7
3. பிரான்சு எவ்வாறு சுதந்திரம் பெற்றது?—ஸ்ரீமான் **G.** வாசுதேவன் அவர்கள், **B. A., (Hons.)** ... 18
4. இந்தியாவின் துன்ப நிலை—பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் ... 25
5. சிரத்தை வேண்டும்—ஸ்ரீமான் ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... 26
6. ஐரோப்பியரின் எழுச்சி—ஸ்ரீமான் **A.** ராமசாமி அவர்கள் 28
7. எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனார்) ... 41
8. இந்திய அரசர்களும் இராஜ்யங்களும்—ஸ்ரீமான் **K. G.** கிருஷ்ணன் அவர்கள், **B. Sc., (Hons.)** ... 47
9. இராம கிருஷ்ணரின் சமரசம்—ஆசிரியர் ஸ்ரீமான் பி. ஸ்ரீ. அவர்கள் ... 55
10. ஆலனின் அமுத மொழிகள்—ஸ்ரீமான் **A.** சுருளியாண்டி அவர்கள் ... 60
11. துடியின் இழிசெயல்—ஸ்ரீமான் அ. சு. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் ... 64
12. பத்திரிகை உலகம்: ... ... ... 65
    1. அரசியல் ஞானம், 2. துருக்கியின் அபி விருத்தி, 3. துருக்கியின் நெப்போலியன், 4. சுதேசிக் துணிகள், 5. சட்டமறுப்பு இயக்கம், 6. மகாத்மாவின் மகோன்னதம், 7. ஜெர்மனியின் புதிய வாழ்வு.
13. ஆசிரியர் குறிப்புகள்: ... ... ... 73
    1. எமது உறுதி மொழி, 2. போஷக கனவான்களுக்கு, 3. சந்தா நேயர்களுக்கு, 4. அயல் நாட்டுச் சந்தா நேயர்களுக்கு, 5. சட்டசபை சென்ற போஷகர் இருவர், 6. சிறை வாழ்வும் பெண்கள் கஷ்டமும், 7. பத்திராதிபர்களுக்கு, 8. ஹிந்தி பாஷையும் "பாரதி" ஆசிரியரும்.


19853

யத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. "பாரதி" தோன்றியவுடன், அது எக் கருத்துடன் வெளியிடப்பட்டதோ, அக் கருத்தை ஆதரித்தோரும், அல்லாத பல்வேறு கக்ஷியினர்–கொள்கையினர்–மதத்தினர்கள் ஆகியோரும் மனமுவந்து வரவேற்று அதன் வளர்ச்சிக்குப் பெருந் துணை செய்து வந்ததொன்றே "பாரதி"யின் நேர்மையையும் போக்கையும் நன்கு வெளிப்படுத்துவதா யிருக்கின்றது. "பாரதி" தனது அன்பர்களின் ஆதரவாலும் அறிஞர்களின் கூட்டுறவாலும் தினே தினே வளர்ந்து நாட்டில் தனது ஒப்பற்ற ஊழியத்தை ஓராண்டு அரசாங்கக் கண்காணிப்புக்கோ, எதிர்ப்புக்கோ இடனின்றிக் கடந்து இரண்டாம் பிராயத்தையும் மெல்ல மெல்லத் தள்ளித் தொண்டாற்றி வரும்போது, இந்தியா சுதந்திரமடைய தேசியப் போராட்டம் ஆரம்பமாகவே "பாரதி"யின் வளர்ச்சியில் அஃது சோதனைக் காலமாய் முடிந்தது.

இந்தியாவின் சுதந்தரப்போர் இன்று நடக்கும் நாளை நடக்குமென் [illegible] தீவிரவாதிகளாகிய காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்த்தவண்ண[illegible]ம், சுதந்தர மென்பது பொம்மலாட்டம்— வெட்டிப் பேச்சு— [illegible]ர்கள் சூழ்ச்சி என்று சுய நலமே உறுக்கொண்ட மிதவாதிக[illegible] பக்கம் ஏழனம் செய்து கொண்டிருக்கவும் உலகமே, பாரத நாட்டின் செயலை மிக ஆவலுடன் என்ன நடக்கப்போகின்றதோவென்று கவனித்துக் கொண்டிருக்கவும் இந்தியாவின் தவப் புதல்வர், பாரத நாட்டின் ஒப்பற்றதியாகி, சத்தியமே உறுக்கொண்ட உலகநேசர், அஹிம்சையே மதமாகக்கொண்ட மகாத்மா காந்தி அவர்கள் சென்ற ஏப்ரல்மீ, இறுதியாக அரசாங்கத்திற்கு இந்தியாவின் அபிலாக்ஷையை நிறைவேற்றுமாறு கூடுமானவரை நேசபான்மையில் அறிவிப்புச் செய்து போதியகாலம் அவகாசம் கொடுத்தும் ஒரு சிறிதும் இணங்கி வருவதாகக்கூடத் தெரியாததினுல், முடிவாகத் தமது நிகரற்ற சத்திய உத்தம சத்தியாக்கிரகப் போரை ஆரம்பிக்கவேண்டிய தவஸ்யமாயிற்று.

காந்தி யடிகளார் பிராயத்தில் தள்ளாத கிளத் தன்மையும் செய்கையில் சுத்தவீரத் தன்மையும் தோற்றத்தில் கருணையே வடிவாகக்கொண்டவரென்பது உலகினர் ஒப்புக்கொண்ட உண்மையாகும். தேசத்தின் விடுதலை காணுது திரும்பப் போவதில்லை யென்று சபதம் செய்து

நவீன

# பாரதி

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."—பாரதி.

ஆசிரியர் : ரா. சுப்ரமண்யம்.

மாலை 1 } உத்தமபாளையம் 1930-ஹு நவம்பர்மீ { 1


## "பாரதி"யின் புனர் ஜனனம்

அல்லது

## "நவீன பாரதி."

தமிழ் நாட்டிலே யாவரும் விரும்பும் வண்ணம் ஓர் தேசியப் பத்திரிகை நடத்தி, தமிழர்களும் தேசீயத்தில் முன்னோக்கிச் செல்லாதவர்களல்ல வென்பதை மெய்ப்பிக்கவே, "பாரதி"யைச் சென்ற 1929-ம் வருட ஆரம்பத்தில் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் ஆசிரியாதிபத்தி

இது பத்தொன்பதாவது—அதாவது சென்ற நூற்றுண்டின் நிலே. "ஒரு பாதி மால்கொள, மற்றொரு பாதி உமையவள் கொண்டு, இரு பாதியாலும் இறந்தான் புராரி" (சிவ பெருமான்) என்று ஒரு புலவர் துணிந் துரைத்தனராம். அவ்வாறே ஜன சமூகத்தின் ஒரு பாதியினைச் சூனிய வாதமும் மற்றப் பாதியினை மூட பக்தியும் பிடித்துக் கொண்டு மரண வேதனை விளைத்தன.

இத்தகைய உலகம் உய்யும் பொருட்டு இராம கிருஷ்ணர், 1833-ம் ஆண்டில் (கி. பி.) பிறந்தருளினர். இவர் பள்ளிக் கல்வியிற் பயிற்சி பெற்றவ ரல்லர். எனினும் ஓதா துணர்ந்த பரம ஞானியாகத் திகழ்ந்து, பண்டிதர்க்கும் பாமரர்க்கும் ஒருங்கே ஆறுதல் அளிக்கும் உபதேச ரத்தினங்களை வாரி வழங்கினர். தம்மோடு பிறந்த இயற்கைப் பேரறிவோடு இவருக்கு இளமையில், இந்து மத மர்மங்களை உணர்த்தும் நிபுணர்களான சாதுக்களின் இணக்கமும் பழக்கமும் ஏற்பட்டன. இயற்கை வாசனையாலும் முற்றத் துறந்த அறிவுச் செல்வரது கூட்டுறவாலும் உள்ளத்தில் விதைக்கப்பெற்ற ஞான பக்தி, இராமகிருஷ்ணரது சாதனங்களால் மேனி செழித்து வளர்ந் தோங்கியது. இவரைச் சிலர் பித்தரென்று கருதினர்; சிலர் சித்தரென்றும் ஜீவன் முக்தரென்றும் கருதினர். பணத்திலும் பதவியிலும் பல வேறு வகையான போகங்களிலும் களி யாட்டங்களிலும் புத்தியைப் பறிகொடுத்து வாழும் மக்க ளுலகமாகிய பித்தர் சாலையில், இராம கிருஷ்ணர் கடவுளுக்குப் பித்தராகிய பக்தர் கூட்டத்தில் ஒருவராய் விளங்கினர்.

இராம கிருஷ்ணர், ஓர் உண்மையான சமரச ஞான பக்தர். வேதியர் குலத்தில் பிறந்தவ ரெனினும், அவர் நாற்பாற் குலத்திற்கும் மேலான தொண்டர் குலத்தினராக மாறிப் பிறந்து, தன் பண்டைக் குலத்தை அறவே துறந்தார். வர்ண ஆச்சிரம வரம்புகளை மீறியதோடு, பழைய பழக்க வழக்கங்களையும் சமயோசிதமாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந் திருந்தார். அவரது உள்ளத்தில் கொழுந்து விட் டெரிந்த ஞான நெருப்பு, நாளடைவில் ஓர் காட்டுத் தீயாகப், பொங்கி யெங்கும் பரவியது.

இராம கிருஷ்ணரது ஞான பக்தியை, ஒரே வார்த்தையில் "சர்வ ஜாதீய—சர்வ சமய—சமரச ஞான பக்தி" என்று கூறலாம். பல ஜாதியினரும், சமயிகளும் கொண்டாடும் மதக் கொள்கைகளின் சாராம்ஸமான தெய்வீக உண்மைகளை இவர் கேள்வி வாயிலாகவும் இயற்கை வாயிலாகவும் அனுபவ வாயிலாகவும் அறிந்துகொள்ள முயன்றார். இயற்கை யழகுகளிலும் பஜனைகளிலும் விக்கிரக வழிபாடுகளிலும் இவர் இறை யொளி கண்டு தன்னை மறந்து தற்போத

மிழப்ப துண்டு. பண்டிதர்களது வாசா கைங்கரியத்தையும் வீணன சாத்திர வாதங்களேயும் மதியாது, இவர் ஆன்ம ஞானச் செல்வத்தையே விரும்பி யடைந்தார்.

இராம கிருஷ்ணரை, இன்ன சமயத்தின ரென்று முத்திரையிட்டுரைக்க இயலாது. அவரே சாக்தர்; அவரே வைணவர்; அவரே சைவர்; அவரே ஹிந்து; அவரே மகமதியர்; அவரே பௌத்தர்; அவர் கிறிஸ்தவர். ஜெகன் மாதாவாகிய மகா தேவியே, அவருக்கு மகா தேவனுகிய சிவ பெருமானுகவும், அழகுத் தெய்வமாகிய திருமா லாகவும், எல்லாம் வல்ல அல்லா வாகவும், கிறிஸ்தவர்களது பரமண்டல நாதனுகிய பரம பிதா வாகவும் காட்சி யளித்தார்.

"எல்லாம் பிரம மயம்" என்னும் உணர்ச்சி இராம கிருஷ்ணரது அகத்தும் புறத்தும் நிறைந் திருந்தது. இவ் வுணர்ச்சியின் பயனுக, அவர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேற்றுமை பாராட்டுவ தில்லே. தாழ்ந்தவ ரென்று ஒதுக்கப் பெற்றிருப்போர் வீடுகளுக்கும் சென்று அவர்கள் செய்யும் வேலேகளேயும் செய்து, 'தாம் பார்ப்பனர்; அன்னுர் பழி தொழிலும் இழி குலமும் படைத்த பஞ்சமர்!' என்னும் உணர்வினே அறவே மாற்றிக் கொண்டன ரென்று, இராம கிருஷ்ணரைப் பற்றிய வரலாறுகள் கூறுகின்றன.

ஒருகால் இராம கிருஷ்ணர், தோதாபுரியார் என்னும் திகம்பர சந்யாசி யிடம் யோக மர்மங்களேக் குறித்து உபதேசம் பெற்றுக் கொண் டிருக்கையில், அத் துறவி, புனிதமாகப் போற்றி வந்த அக்கினி குண்டத்தில் ஒருவன் நெருப் பெடுத்துக் 'கஞ்சா'ப் பற்ற வைத்தனனும். அது கண்டு கடுஞ் சினம் கொண்ட தோதாபுரியை நோக்கி, இராம கிருஷ்ணர், "எல்லாம் பிரம மென்று தாங்கள் கூறுவது இவ்வாறு தானே? இந் நெருப்பும், இதனே எடுத்தவனும் பிரம மயந்தானே! பிரமத்தில் உயர்வு தாழ்வு உண்டோ?" என்று இடித்து அறி வுறுத்தினராம். இத் தகைய செயல்கள் பல, இராம கிருஷ்ணரது வாழ்க்கைச் சித்திரத்தை அழகு செய்து காட்டுவதோடு, சமரச தர்மத்தின் சூட்சுமத்தையும் நன்கு பிரதி பலிப்பிக்கின்றன.

தற்கால உலகிற்கு இன்றியமையாத சமரச—சமய ஞானமே இராம கிருஷ்ண பரம ஹம்ஸராக உருவெடுத்து வந்த தென்று கருதுதல் வேண்டும். ஒருகால் இறைவன், இராம கிருஷ்ணர் முன் அகில லோக சௌந்தர்யத்தையும் ஆடையாக அணிந்து கொண்டு, நட்சத்திர மாலே பூண்டு வருகிறுன். ஒருகால், முடிவற்ற அந்தகாரத்தினிடையே, உருவங் கடந்த மகா காளி யென்னும், அதி பயங்கரமான பேய்க் கோலம் பூண்டு, அட்டகாசஞ் செய்கிறுன். ஒருகால் மனேஹரமான முக மண்டலம்; ஒருகால் பயங்கரமான சௌந்தர்யச் செல்

வம்! இத்தகைய பரம் பொருளுக்கு இராம கிருஷ்ணர் தமது இத யத்தை—தமது அறிவை—தமது வாழ்க்கையை முழு உரிமை யாக்கினர். அற்புதமான இயற்கை யழகுகளினூடே, அவர் அதி யற்புதமான இறையழகினை—அருளழகினைக் கண்டார். உலக மக்களது அகத்தி லும் முகத்திலும் இறைவனது முகச் சாயலைக் கண்டுபிடித்தார். காலை வேளையில் இளங் கதிர், தன் பொன் முகம் காட்டி யெழும்போது, அவ ருள்ளத்தில் ஞான சூரியன் உதயஞ் செய்கிறன். அந்தி மயங் கும்போது, ஆகாயத்தில் எழுந்து தயங்கிய சந்திரன், அவருள்ளத் திலே அருளின் வடிவமாகிய அம்புலியாகப் பரிணமிக்கிறன். பூர்ண ஞானியாக விளங்கிய பரமஹம்ஸர் 'பூர்ணகாம'னுகவும் விளங்கினர். வைராக்கியக் கோலமும் அன்புச் சீலமும் அவர்பால் இரண்டறக் கலந் தன.

பரம ஹம்ஸர் விஷயத்தில், வாழ்க்கையும், உபதேசமும் ஒன்று பட்டு இசைந்து நின்றன. பரம் பொருள் ஒன்றே யென்றும், ஆனல் அப் பொருளை நோக்கிச் செல்லும் மார்க்கங்களான சமயங்கள் பல வென்றும் அவர் ஒழுக்கத்தாலும் உபதேசத்தாலும் நன்கு வலி யுறுத்தினர். அருணேதயம், சூரியோதயத்தை முன் கூட்டி அறி விப்பது போல, இறை யொளி யிதயத்தில் உதயமாவதை, அன்பும் அகத் தூய்மையும் நல் லொழுக்கமும் தன்னல மின்மையும், முன் நின்று காட்டுகின்றன என்பதும் சுத்த ஞானத்திற்கும் சுத்த பக்திக் கும் முடிவில் வேற்றுமை யில்லை யென்பதும் அவர் கொள்கை.

"அன்னையே! நான் பெரியவ னென்றும், பிராமண னென்றும், அவர்கள் தாழ்ந்தவர்க ளென்றும் பறையர்க ளென்று முள்ள எண் ணத்தை என் உள்ளத்தி னின்றும் அறவே ஒழித்துவிடு. அவர்களும், அத்தனை வடிவமாய்த் தோன்றும் நீயும் ஒன்றே யன்றி வேறு யார்?" என்பது இராம கிருஷ்ணர், சாதன காலங்களில் அல்லும் பகலும் செய்து வந்த பிரார்த்தனை யாகும். இதுவே தற்கால இந்தியாவின் பிரார்த்தனையாகவு மிருத்தல் கண்கூடு.

"பிற மதங்களும், பாகதிக்குச் செல்லும் வழிகளே யென்று உண்மையான பக்தன் கருதுதல் வேண்டும். அன்னிய மதங்களை நாம் எப்பொழுதும் கௌரவ மாகவே நோக்குதல் வேண்டும். ஒருபோதும் கிணற்றுத் தவளைக்கு நிகராக வேண்டாம். வீண் வாதம் செய்யவும் வேண்டாம்; வாத மிடுவது எளிது; அனுஷ்டானமும் அனுபவ ஞான மூமே இன்றி யமையாதன" என் றிவ்வா றெல்லாம் பரம ஹம்ஸர் உபதேசஞ் செய்தார். வாழ்க்கையிலும் அனுஷ்டித்துக் காட்டினர். இவ் வுபதேசமே, விடுதலை பெறும் இந்தியா, நவீன உலகத்திற்கு அளிக்கும் காணிக்கை யாகும்.

# ஆலனின் அமுத மொழிகள்.

## ஸ்ரீமான் A. சுருளியாண்டி அவர்கள்.

("பாரதி"யில் 6-வது மணி 431-ம் பக்கத் தொடர்பு.)

39. எதனை யெதனை எந்த எந்த நேரத்திற் செய்ய வேண்டுமோ, அதனை யதனை அந்த அந்த நேரத்தில் உங்கள் முழு மனதோடும் செய்து முடிப்பீர்களாக.

40. எதிலும் உங்கள் மனதை அரை குறையாகச் செலுத்தாதீர்கள்.

41. எதனையும் அரை குறையாகச் செய்யாதீர்கள்.

42. எதைச் செய்யினும் திருத்த மாகவும் பூர்த்தி யாகவும் செய்யுங்கள்.

43. உண்ணல், உறங்கல், கற்றல், விளையாடல் முதலிய சகல கருமங்களையும் கிரமமாகவும், ஒழுங்காகவும் செய்து முடிப்பீர்களாக.

44. மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தல், பல பாஷைகளைக் கற்றலை யொக்கும்.

45. மனிதனது ஏகாக்கிர சித்தமே, அவனடையும் உயர் பதவிகட் கெல்லாம் அடிப்படை யாகும்.

46. மனதை ஒழுங்கு செய்வதில் பிரதம சாதனம், சரீரத்தின் சோம்பலை யொழித்தல். சோம்பலை மேற் கொண்டு நிற்றல் மெய்ப் பொருளின் மார்க்கத்திற்கு ஓர் பெருந் தடையாகும்.

47. மனிதனது செயல்கள், அவனது ஒழுக்கமும் புற நிலைமையு மாகிய கனிகளைத் தருகின்றன.

48. இவ் வுலகில் மனிதன் அனுபவிக்கும் இன்பங்களே சுவர்க்கம்; துன்பங்களே நரகம்.

49. நல் லொழுக்கமே உயர்ந்த ஆபரணம்.

50. நிலத்துட் புதை பட்டுள்ள வித்துக்கள் நாளடைவில், இலை மலர் கனிகளாக வெளிப்படுதல் போன்றே, அகத்துட் புதை பட்டுள்ள நினைப்புகளும் நாளடைவில் சொற்களாகச், செயல்களாகச், செய்து முடிக்கப் பெற்ற காரியங்க ளாக வெளியாகின்றன.

51. சுகமும் துக்கமும், மகிழ்வும் கவலையும், துணிவும் அச்சமும், விருப்பும் வெறுப்பும், அறிவும் மடமும் அகத்தி லன்றி வேறெங்கு மில்லை. அவை யாவும் மனோ நிலைமைகளே யன்றி வேறல்ல.

52. உங்கள் வாக்கினின்று வரும் ஒவ்வொரு வார்த்தையும் பொருள் நிறைந்ததாயும் இன்பம் பயப்பதாயு மிருக்கட்டும்.

53. புலாலுண்ணல், மதுபானம், பர ஸ்திரீகளுடன் உலாவச் செல்லல் முதலிய தீய பழக்கங்களை ஒருக்காலும் கைக்கொள்ளாதீர்கள்.

54. குன்றுகளின் மீது தனியே சென் றமர்ந்து ஆன்ம தத்து வங்களைப் பற்றிச் சிந்தனை செய்வீர்களாக.

55. மனிதனது புற நிலைமைக ளெல்லாம் அவனது அக நிலை மைகளி னின்றே தோன்றுகின்றன. ஆகலின், புற நிலைமைகளைத் திருத்தல் வேண்டுமேல் முதலில் அக நிலைமைகளைத் திருத்தல் வேண் டும்.

56. மனிதன் தனது அகத்தின் அரசன்; தனது மனத்தின் காவலன்; தனது வாழ்க்கையாகிய கோட்டையின் தனிக் காப்பாளன். அவன் அம் முறையில் ஊக்கமோ அன்றித் தூக்கமோ கொண்டிருத் தல் கூடும்.

57. மனிதன் தனதுவாழ்வு முழுவதும் தனது மனத்தி னின்றே வருகிறதென அறிவா னாயின், அக் கணமே அவனுக்குப் பேரின்ப வீட்டின் வாயில் திறந்துள்ள தாகும்.

58. மனம், தளர்ச்சி யின்றி வாழ்க்கை நிலைமையாகிய வஸ்தி ரத்தை நெய்துகொண் டிருக்கிறது. நினைப்பே நூல்; தூய, தீய செயல் களே பாவும் ஊடும். ஒழுக்கம், வாழ்க்கையாகிய தறியில் நெய்யப் பெறும் வஸ்திரம். மனம், தான் நெய்த ஆடையால் தன்னை உடுத்திக் கொள்கிறது.

59. மனிதன் பிறரால் எவ் விடத்தும் கட்டுப்பட் டிருக்கவில்லை. ஆயின், அவன் தானே தன்னைப் பல இடங்களில் கட்டுப்படுத்தி யுள் ளான். அவன், தானே தன்னைக் கட்டுப்படுத்தி யிருப்பதால், அவன் நினைத்த மாத்திரத்தில் தானே தன்னை அக் கட்டுகளி னின்றும் நீக்கிக் கொள்ளல் இயலும். அவன், தான் விரும்பும் வண்ணம் தீயனோ அன் றித் தூயனோ, கீழோனோ அன்றி மேலோனோ, மடையனோ அன்றி அறிஞனோ ஆதல் கூடும்.

60. மனம் எந்த நிலைமையையும் மாற்றுதற்கும், விட்டொழித் தற்கும் வல்லமை யுடையது.

61. பிறரைக் கெட்டவர் என்னலும், கெடுதிக்கு மூலம் புற நிலைமைகள் என் றெண்ணி அவற்றோடு போராடுதலும், உலகத்தின் துன்பத்தையும், அமைதி யின்மையையும் அதிகரிப்ப தன்றிக் குறைப்ப தில்லை.

62. மனிதன் சில செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்து பழக்கங்க ளாக்கிக் கொள்ளலாம். அவற்றிற்கு மாறுன செயல்களை மேன் மேலும் செய்து அப் பழக்கங்களை அழித்து விடலாம். அவன், மெய்ப் பொருள் முழுவதும் தனக்கு மறை படும் வரையில் தன்னைச் சுற்றிப் பொருள்களை அமைத்துக் கொள்ளக் கூடும். அவன் மெய்ப் பொருளைப் பூரணமாகக் காணும் வரையில் தன்னைச் சுற்றி யுள்ள பொருள்களை ஒன்றன் பின் னென்ருக அழித்துவிடக் கூடும். மனிதன் செய்யக் கூடியன அளவற்றன. அவன், பூரண சுதந்திர முடையவன்.

63. உள் நோக்கும் நினைப்புக்கள், ஒழுக்கத்தையும் வாழ்வையும் உண்டு பண்ணுகின்றன. மனிதன், தனது விருப்பத்தாலும் முயற்சி யாலும், நினைப்புக்களைத் திருத்திக் கொள்ளவும் மாற்றிக் கொள்ளவுங் கூடும்.

64. தூய்மையால் ஒழுங்கு செய்யப் பெற்று, ஞானத்தால் பலப்படுத்தப் பெற்ற மனமானது, பிரிக்கக் கூடாத வண்ணம் துன்பத் தோடு கட்டப் பெற்றுள்ள சகல அவாக்களையும் காமங்களையும் ஒழித் துத் தெளிவையும் சாந்தியையும் அடைகிறது.

65. புறம், அகத்தின் நிழல்; அகத்தின் காரியம். அகம் சுத்தமா யிருக்கும் பொழுது புறத்திலுள்ள சகல காரியங்களும் சுத்தமா யிருக் கின்றன.

66. சகல வளர்ச்சியும் வாழ்வும் அகத்தி லிருந்து புறத்திற்கு வருகின்றன. சகல தேய்வும் அழிவும், புறத்தி னின்றும் அகத்திற்குச் செல்கின்றன.

67. சகல விரிவுகளும் அகத்தி லிருந்து நிகழ்கின்றன. சகல திருத்தங்களும் அகத்தில் செய்யப்பட வேண்டும்.

68. எவன் பிறரோடு போராடுதலை விட்டுத் தனது மனத்தைத் திருத்துவதிலும், பலப் படுத்துவதிலும், வளர்ப்பதிலும் தனது சக்தி களைப் பிரயோகிக்கிறுனே, அவன் தனது சக்திகளை யெல்லாம் ஒரு முகப் படுத்தித் தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறுன்.

69. மனிதன் தனது மனத்தைச் சம நிலையில் நிற்கச் செய்த பொழுது, தனது இரக்கத்தாலும் ஈகையாலும் பிறரையும் அந்த நல்ல நிலைமைக்குக் கொண்டு வருகிறுன்.

70. பிறருடைய மனத்தை ஆளுவதும் நடத்துவதும், ஞானத் திற்கும் சாந்திக்கும் வழிக ளன்று. தனது சொந்த மனத்தின் மீது தனது நியாயமான அதிகாரத்தைச் செலுத்துவதும், உயர்ந்த ஒழுக் கங்களாகிய சன்மார்க்கங்களில் தன்னை நடத்துவதும் ஞானத்திற்கும் சாந்திக்கும் வழிகள்.

# பத்திரிகை உலகம் *

அரசியல் ஞானம்

" படிப் படியான கொள்கைகளுக்கு இந்தியத் தலைவர்கள் இணங்காது ஆத்திரப்படுகிறார்கள் " என்று சைமன் குழுவினர், நம் தலைவர்களைத் தாக்கி யிருப்பது கண்டு பாபு இராமானந்த சாட்டர்ஜி அவர்கள், தமது ஜூலை மாத "மார்டன் ரெவ்யூ"வில், அரியதோர் மறுப்புரை வரைந்துள்ளார்கள். அதில் அரசியல் ஞானம் என்பது பற்றி அவர்கள் எழுதுவதாவது:—

எல்லா விதக் கலைகளையும் போன்று அரசியல் ஞானம் என்னும் கலையும் மனிதனது வாழ் நாளில் கற்றுக் கொள்ளக் கூடியதே. அரசியல் ஞானியாக வரும் பிரிட்டிஷ் குழந்தையும் இந்தியக் குழந்தையைப் போன்று பிறக்கும் போது, ஒன்றையுமே அறிவ தில்லை. பிரிட்டிஷ் குழந்தைகள் முதலிலேயே தளகர்த்தர்களது சின்னங்களோடோ அல்லது அரசியல் ஞானிகளின் மந்திரித்துவத் தோடோ பிறக்கிற தில்லை. அதே போல் இந்தியக் குழந்தைகளும் ஆரம்பத்திலேயே கூலிக் காரனது ஆயுதங்களோடோ அல்லது குமஸ்தா வேலை பார்க்கிறவனின் எழுதுகோலோடோ பிறக்கிறது மில்லை. சௌகரியங்களும் சந்தர்ப்பங்களும் ஒன்று போல் அளிக்கப்படு மாயின் இந்தியக் குழந்தையும் நிச்சயமாக எந்தத் தேசத்துக் குழந்தையின் பக்குவ நிலைக்கும் சமமாக வரக் கூடும். இராஜ தந்திரம் பூராவும் ஜென்ம பலன் எனக் கருதப்படு மாயின், எல்லா அரசியல் ஞானிகளின் மக்கள் யாவரும் அரசியல் ஞானிகளாகவும்

---

குறிப்பு:—

* பிரதி மாதமும் "பத்திரிகை உலகம்" என்ற இத்தலைப்பின் கீழ் உலகப் பத்திரிகைகளி லுள்ள விசேஷக் குறிப்புகளையும் செய்திகளையும் பிரசுரிப்பதாக எண்ணியுள்ளோம். இம் முறையானது "நவீன பாரதி" யின் வாசகர்களை மிக மகிழ்விப்பதா யிருக்குமென்று உவகையடைகின்றோம். இனி மேல் "பாரதி" யின் அபிவிருத்தி "நவீன பாரதி"யின் பால் ஆரோகணித்துப் பூரணமான நல் லபிப்பிராயத்தையும் நன்மையையும் பயக்குவிக்கும் வழியில் வளர்ந்து வருமெனவே யெண்ணுகிறோம்.

ஆசிரியர்.

அல்லாதவர்கள் தங்கள் பெற்றோர்களின் பூர்வ நிலைமை களுக்குமே ஆளாக வேண்டும். ஆப்ரகாம் லிங்கன் என்பவரைப் போன்று அநேகர் தோன்றுவது முடியாத காரியம். ஆஸ்குவித், லாயிட் ஜார்ஜ் ஆகியவர்கள் எதைச் செய்து முடித்தனர்களோ அதனை அவர்களது ஜீவிய காலத்திலே தான் கற்றார்கள். "கௌண்ட் ஒக்குமா" என்பாரும் எதைச் செய்து முடித்தனரோ அதனை அவர் வாழ் நாளிலே தான் கற்றுக் கொண்டார். இவர்களைப் போலவே தாதாபாய் நௌரோஜி அவர்களு மாவர். இவர்களைப் போலவே அசோகர், சந்திர குப்தா, சமுத்திர குப்தா, ஷேர்ஷா, அக்பர், சிவாஜி ஆகியவர்களு மாவார்கள். இவர்களது பெற்றோர்கள் அரசியல் அறிவையும் அனுபவத்தையும் ஒரு குவியலாகக் கூட்டி வைத்து அப்பால் அவற்றை அப்படியே இவர்களது உடம்பினுள் நுழைத்தார்க ளில்லை. ஜென்ம பலன் என்பதிலும் ஜாதிக் குணம் என்பதிலும் சில உண்மைகள் இருக்கலாம், அல்லது இல்லா திருக்கலாம். ஆனால் மக்களையும் தேசங்களையும் வைத்துப் பரிபாலிப்ப தற்குத் தனிப் பிறவி எடுக்க வேண்டும் எனச் சொல்லிப், பாமர மக்களை நம்பும்படி செய்தவர்கள், அதிகாரங்களையும் உரிமைகளையும் வகித்து வரும் ஒரு சில கூட்டத்தார்களே யாவர். இவர்கள் உணர்ந்தோ உணராமலோ செய்து வந்திருக்கும் மாய தந்திரத்தை ஒருபோதும் மறுக்க இயலாது. இத் தந்திரம் இந்தியாவில் ஒவ்வொரு காலத்திலும் வெற்றியையே அளித் துள்ளது. எண்ண முடியாத தலைமுறைகளாக சில விடங்களில் இந்த நாள் வரையுங் கூட "பிராமண ரல்லாதார்" எனப் படுவோரில் பெரும் பாலோர், பல பிறப்புகள் எடுத்தபின் பிறகே பிராமணர்களாக வர முடியு மென்று நம்பிக்கொண் டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது பெரும்பாலும் இந்தச் சாயம் வெளுத்தே வருகிறது. பிராமண ரல்லாதார் என்று கருதப் படுவோர்களில் அநேகர் நாங்கள் திரும்பவே பிறந் திருக்கிறோம் என்று சொல்ல முன் வந்து விட்டார்கள். பிரிட்டிஷ் காரர்களும் அரசியலாகிற "பிராமணீயத்தை," இனியும் தமக்கே உரிய தெனச் சொல்வதற்கு இக் காலம் நிச்சயமாக இடங் கொடாது.

Modern Review, Calcutta.

## துருக்கியின் அபி விருத்தி

துருக்கியில் அங்கோரா அரசாங்கம் செய்து வரும் புதிய சீர் திருத்தங்களை யிட்டு டாக்டர் "ஜெர்மன்ஸ்" என்னும் ஓர் பெரியார், "விஸ்வ பாரதி"யாகிய மும்மாத வெளி யீட்டில் ஓர் கட்டுரை வரைந்துள்ளார். அதில் ஓர் பகுதி வருமாறு:—

அரசாங்கம் புதிய சட்டங்களை ஒரே தொடர்ச்சியாக உண்டு பண்ணி வருகிறது. பல தேசங்களின் உயரிய சட்டங்களை அது ஏற்று விட்டது. இத்தாலி தேசத்தின் குற்றச் சட்டங்களையும், ஸ்விட்ஸர்லாண்டு தேசத்தின் நிலவரிச் சட்டங்களையும், ஜர்மனி தேசத்தின் வியாபாரச் சட்டங்களையும், அது உள் நுழைத்து வருகிறது, இவைகள் யாவும் துருக்கி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு, அரசியல் சபையில் சிறு விவாதங்களுக்குப் பின்னல் ஏக மனதாய் நிறைவேற்றப்பட் டிருக்கின்றன. இவ்வித ஐரோப்பிய நாடுகளின் சட்ட அமைப்பில் சமூக விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் ஏற்பட் டிருக்கும் பெரும் மாறுதல்கள் மிகத் தெளிவாகக் காணப்படு கின்றன. ஒயின் அருந்துதல் கட்டுப்படுத்தப் படுவதில்லை. ஒன்றுக் கதிகமான மனைவிகளை மணந்து கொள்ளுவதற்கு அரசாங்க அனுமதி வேண்டுவ தில்லை. முன் காலத் திருந்த வியாபாரத் தடங்கல்கள் யாவும் விலக்கப்பட்டு எங்கணும் புதிய சட்டங்களின்படி புதிய கொள்கைகள் பல பாவி வருகின்றன. உதாரணமாக வருங் காலத்தில் பெண்கள் புருஷர் களுக்கும், பிள்ளைகள் தந்தைமார் களுக்குமே வார்சுகளாவார்கள். இப் புதிய சட்டங்கள் வாழ்க்கையின் வெளித் தோற்றங்கள் யாவையுமே துருக்கியில் மாற்றி யமைத்துவிடும். அந்தப்புர வாழ்வும் முக மூடி வழக்கங்களும் மறைந்து போய் இப்பொழுது பெண்கள் மிகத் தாராளமாக எங்கணும் போய் வருகிறார்கள். எல்லாவிதப் பொது விஷயங்களிலும் கலந்து கொள்கிறார்கள். ஐரோப்பிய முறைகளில் ஆடைகள் அணிந்து வருகிறார்கள். தங்கள் புருடர்களின் வாழ்க்கைத் துறைகளி லெல்லாம் பங்கு பெறுகிறார்கள்.

Viswabarathi, Santhini Kathan.

## துருக்கியின் நெப்போலியன்

மிர். "ஒயன் துயிடி," என்னும் ஓர் பிரபல பத்திரிகா நிருபர் லண்டனி லிருந்து வெளி வரும் "பார்ட் நைட்லி றெவ்யூ" என்னும் பத்திரிகையில் "புதிய துருக்கியைப் பற்றிய சில விஷயங்கள்" என்ற தலைப்பில் ஓர் கட்டுரை எழுதி யுள்ளார். அதில் அவர் ஹாஜி முஸ்தபா கமால் பாஷாவை நெப்போலிய சக்ரவர்த்திக்கு ஒப்பிட்டு எழுதும் ஓர் பகுதி வருமாறு:—

நான் பேசும் பொருட்டாகவே அங்கோராவிற்கு வந்து சேர்ந்தேன். ஐந்து நாட்களாகத் தொடர்ந்தும் பேசினேன். இயற்கை யாகவே எனது சம்பாஷணைகள் யாவும் முஸ்தபா கமால் அவர்களது இராஜ தந்திரத்தைப் பற்றியும் அவரது சுபாவத்தைக் குறித்துமே சென்றது. சாதாரணமாக

மேல் நாட்டுப் பத்திரிகைகளில், அவர் இறுமாப்பும் இரக்க மின்மையும் கொண்ட ஓர் இராணுவ வீரன் என்று அவரை வர்ணிப்பதி லேயே பத்திரிகா நிருபர்கள் கருத் துடையவர்களா யிருக்கிறார்கள். ஆனால் அவர், மகா பெரும் அறிவாளியும் ஆழ்ந்த யோசனை யுடையவரு மாவர். துருக்கியர்கள் "ஹாஜி," அவர்களை துருக்கியின் நெப்போலியன் என்றே ஏற்றுக் கொண் டிருக்கிறார்கள். அது அவருக்குத் தகுந்த பெயரே யாகும். நெப்போலியனைப் போலவே அவர் பிரபுக்களது அதிகாரச் செருக்கையும், மதத்தின் பேரால் ஏற்பட்டு வந்த எதிர்ப்புகளையும் அதஞ் செய்தார். நெப்போலியனைப் போலவே அவர் நாட்டி லுள்ள நியாய விதிகளையும் ஒழுக்க முறைகளையும் சீர் திருத்தி யமைத்தார். நெப்போலியனைப் போலவே அவர் தனது நாட்டு மக்களுக்கு தன்னம்பிக்கையையும் தேசிய கௌரவத்தையும் அளித்தார். ஆனால் நாட்டின் செல்வம் சம்பந்தமாகப் பொருளாதார முறையில் அவர் ஓர் நிர்மாண அமைப்பை உண்டுபண்ணி யிருக்கிறாரா? என்ற எனது இக் கேள்வி தடைப் படுத்தப் பட்டது. என்றாலும் அவர் அதையும் செய்து முடிப்பார். ஏனென்றால், அவர் அபார தைரியசாலி, அபார புத்திசாலி. அரண்மனை சம்பந்தமாகவும் அந்நிய நாடுகள் சம்பந்தமாகவும் முன் மாதிரி போன்ற ஓர் கடும் போர் இனியும் நிகழா திருக்க வேண்டுவதே அதற்கு அவசிய மாகும்.

Fort Nightly Review, London.

சுதேசித் துணிகள்

இந்திய நாட்டுத் துணிகள் இந்திய மக்களுக்குப் போதுமான அளவில் இல்லை என்று கண்டதும் ஸ்ரீமதி. மீராபாய் அவர்கள் "யங் இந்தியா" பத்திரிகையில் எவ்வாறு பூரண சுதேசியத்தைக் கடைப்பிடித் தொழுகுவ தென்பது பற்றி எழுதுகிறார்கள்.

சுதேசித் துணிகள் என்ற நிலையில் இந்தியாவிலுள்ள எல்லா ஆலைத் துணிகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டாலும், 200 கோடி கெஜம் துணிகள் நமது தேவைக்குக் குறைவு படுகின்றன. ஆனால் உண்மையில் ஆலைத் துணிகளிலும் 100-க்கு 20 பங்கு அந்நிய நாட்டார்களது ஆலையி லிருந்து உற்பத்தி செய்து தரப் படுவதால் அவற்றைச் சுதேசித் துணிகளாகக் கொள்ள முடியாது. இதன் நிமித்தம் 50 கோடி கெஜம் துணிகள் அதிகப் படியாகக் குறைந்து விடுகிறது. எனவே மொத்தத்தில் 250 கோடி கெஜம் துணிகள் நமக்குக் கூடுதலாக ஆவசியப் படுகிறது. இதற்கு என் செய்வது?

ஆலைகள் பலவித வழிகளில் இரவும் பகலும் வேலை செய்து உற்பத்தியைச் சிறிதளவு அதிகப்படுத்தக் கூடும். ஆனால் நமக்கு வேண்டும் பெருவாரியான அளவையும், நமது மக்களைக் கூடுமான வரையில் மிகச் செட்டாகச் செலவு செய்யும்படி செய்து, கதரிலேயே சரிக் கட்ட வேண்டும்.

என்றாலும் குறைவு படுகின்ற இதனைக் கதரால் சரிப் படுத்துவதற்குச் சிறிது காலமும் பிடிக்கும். ஏக தேசம் அனுபவ முதிர்ந்த நமது எல்லாத் தலைவர்களும் சிறையி லிருக்கும் இத் தருவாயில் நமது நாடு எங்கணும் ஒரே சமயத்தில் கதர் நூற்கவும், நூற்ற நூலை நெய்து கொடுக்கவும் வேண்டி யிருக்கிறது. இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாளித்துக் கொள்வதற்கு நாம் ஏதாவது ஓர் புதிய உபாயத்தைக் கட்டாயமாகக் கைக்கொண்டுதான் தீர வேண்டும் அதுவும் நமது சொந்த அறிவினாலேயே ஏற்படல் வேண்டும்.

பண்டிட் மோதிலால் நேருவும் மற்றோர்களும் இந்த அவசியத்தைப் பற்றி நமக்கு அறிவித்து விட்டார்கள். ஆகையால் நாம் அதனை உண்மையில் நம்மால் ஆகு மளவும் நடத்தி வைக்கப் பார்ப்போம்.

ஒவ்வொருவரும் இப்பொழுது அவரவர்களுக்குத் தேவைப்படி நான்கு ஜோடி ஆடைகளுக்கு மேற்படாமலும், இரண்டு ஜோடிகளுக்குக் குறைவில்லாமலும் உபயோகித்துக் கொள்வதென்று தீர்மானித்துவிட வேண்டும். சென்ற நான்கு வருடங்களாக எனது சொந்த ஆவசியத்திற்கு மூன்று ஜோடிகள் மிகத் தாராள மென்று கண்டு கொண்டேன். போர் நடந்து கொண் டிருக்கும் இச் சமயத்தில் தேசாபிமானத்தை யிட்டு நம்மில் ஒருவரேனும் ஆண்டு ஒன்றுக்கு நான்கு ஜோடி ஆடைகள் போதாதெனக் குறை கூற மாட்டார்க ளென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்தவிதமாக நான் முன் னொருக்கால் குறிப்பிட்டபடி கதர்ப் பிரியம் உண்டுபண்ணி யிருக்கும் நெருக்கடியையும் ஏராளமான கதர் அபிவிருத்திக்கு வேண்டற்படும் காலத்தையும் வீடுகளி லிருந்தே உற்பத்தி செய்யவேண்டும் என்பதையும் நாம் சரிப்படுத்திவிடலாம்.

நமக்கு நிறைவேற வேண்டும் பெருங் காரியத்தை நினைக்கும்போது இந்தச் சிறிய தியாகம் பெரிதன்று.

Young India.

சட்ட மறுப்பு இயக்கம்

"எவரிமான்," என்னும் பிரிட்டீஷ் பத்திரிகை மகாத்மா காந்தியின் இயக்கத்தைப் பற்றி எழுதுவது காண்க.

உண்மையின் விஷயத்தில் நாம் தவருக நினைக்கலாகாது. மகாத்மா, நாட்டையே மாற்றி யமைத்துவிட்டார். இந்தக் காலம், அவரது தத்துவத்தின் பயனைப் பழய இந்தியாவி லிருந்து புதிய இந்தியாவாகப் பிரித்து வைக்கிறது. எதிர் பாராத மகா பெரும் மாற்றத்தை உண்டுபண்ணி யிருப்பதற்கு அவரது, ஒப்பற்ற ஆத்ம சக்தியே காரணமாகும். இர்வின் பிரபுவின் சமாதானக் கொள்கைகளை அவர் மறுத்ததும், அவர் நடத்தை பரிகசிக்கத் தக்கதான ஓர் நிலையை எய்தி விட்டது. எவ்வளவு தான் சொன்னாலும் ஆச்சரியகரமான நிலைமையி லிருந்து உண்டாகும் ஆஹர்ஷண சக்தியை எதிர்த்து நிற்கிறவர்கள் நம்மில் மிகச் சிலரே இருக்கிருர்கள். ஆடை இல்லாத ஓர் இந்துவும், அறுபது வயதுக் கிழவரும், தற்கால உலகத்துக்கோர் உதாரண புருடராக விளங்கும் ஒப்பற்ற சாதுவுமான அவர், உணவுக் குதவாத சில அவுன்ஸ் உப்புத் தயாரித்து நாகரீக உலகத்தில் வலிமை சிறந்து விளங்கும் மகா பெரும் அரசாங்கத்தின் வல்லமையை இழிவுபடுத்தி விட்டார். காம்பே வளைகுடாவைச் சேர்ந்த டண்டியின் கடற் கரையில் பெரியோரும் சிறியோரும் கூடினர். அக்காட்சி எக்காலத்திலும் அழியாதது. அதனல் பிரிட்டீஷ் அரசாங்கத்தின் எதிர்கால அமைப்பு நிச்சயமாக மாறியேவிட்டது.

"Every Man," London.

## மகாத்மாவின் மகோன்னதம்

அமெரிக்காவி லுள்ள ரெவரன் டாக்டர் "ஜான் ஹேனஸ் ஹோம்ஸ்" என்னும் பாதிரியார் சிக்காக்கோவி லிருந்து "யூனிற்றி" என்னும் அரிய பத்திரிகையில் எழுதுவதாவது:—

நாம், முதன் முதலில் இந்தியாவின் விடுதலைப் போருக்குத் தலைவராக விளங்கும் இந்தப் பெரிய இந்திய (காந்தியா) ரிடத்தி லிருந்து எதை அடைந்திருக்கிறேம்? இங்கே இவர் தனது தேச இலட்சியத்தின் விஷயத்தில் நாடெங்கும் செல்வாக்குப் படைத் திருப்பதானது "ஜ்யார்ஜ் வாஷிங்டனுடைய நிலைமையை வகித்து விளக்குகிருர்.

ஆனல் மகாத்மா, தேசாபிமானியின் தன்மையையும் கடந்து காண்கின்ருர். அவர் ஓர் நாகரீகத்திற்கும் ஓர் உலகத்திற்குமே தலைவராக இருக்கிருர். கர்வமும், அதிகாரமும், இறுமாப்பும் கொண்ட மேல் நாடுகளுக்கு விரோதமாக எழுப்பப்பட் டிருக்கும் இயக்கத் தலைவரா யிருக்கிருர். இங்கே உயிர்த் தெழுந்திருக்கும் ஆசியாவின் உயிர் நாடி போன்று, கலைக் ஞானத்தைக் காக்க வந்த ஓர் இரட்ச கர்த்தா போன்று, டாக்டர் ஸன்–யாட்–ஸென் அவர்களது நிலைமையை வகித்து விளங்குகிருர்.

ஆனால் மகாத்மா, இந்தியாவுக்கும் ஆசியாவுக்கும் மட்டு மன்றி உலக முழுவதற்குமே உரியவ ராவார். வாழ்க்கை முறைகளை உலக மக்கள் திரும்பவும் தெரிந்து கொள்ளும் பொருட்டே அவர் பிறந் திருக்கிறார். ஏனென்றால் காந்தி, வழிகாட்டி நடத்துகிற இந்த இயக்கத்தில் நாம் எதைக் காண்கிறோம்? உலக சரித்திரம் அறிந்ததின்படி, ரோம ராஜ்யம் வீழ்ந்து அழிந்ததின் பின்னால், ஒரு புறத்தில், வேண்டிய அளவு ஆள்வலியும் பொருள் வலியும் படைத்து, தற்கால உலகத்தையே சர்வ நாசம் செய்ய வல்லதான அளவிட இயலாத பயங்கரம் பொருந்திய இயந்திர பீரங்கிகள், கொலை ஆயுதங்கள், வெடி குண்டுகள், விமானப்படைகள் ஆகிய போர்க்கருவிகள் தாங்கி நிற்கும் ஓர் மகா பெரும் அரசாங்கம். மறுபுறத்திலோ மெலிந்து தளர்ந்து நடக்க இயலாது, அரையிலோர் சிறு துணி தரித்து சைனியங்களோ அல்லது ஒரு கூட்டம் துணைவர்களோ இல்லாமல் தன்னையே போன்று எதிர்க்க இயலாதவர்களும் நிராயுதபாணிகளுமான ஒரு சில சிஷ்யருடன் நிற்கும் துரும்பனைய ஓர் மனிதர். ஆயுத பலத்திற்கும் ஆத்ம பலத்திற்கும் நடந்து வரும் இது போன்ற ஓர் போரை இவ்வுலகம் எப்பொழுதேனும் கண்டதுண்டா? பிலாத்து அரசன் ஏசுவை எதிர்த்த காலத்திற்கிப்பால் காணவேயில்லை. சர்வாதிகாரம் படைத்த ரோமராஜ்யத்தின் தேசாதிபதியாயிருந்த அவனிடத்தில் அவரும் "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் என் ஊழியக்காரர் போராடி யிருப்பார்களே; இப்படி இருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற் குரியதல்ல" என்றார். திரும்பவும் 2000 வருஷங்களுக்கிப்பால் பிலாத்து அரசனது சிம்மாசனம் சர்வதேசங்களுக் கிடையில் உண்டாயிருக்கிறது. இன்னும் சிலுவையில் அறையப்படும் ஓர் சம்பவம் நிகழத்தான் வேண்டுமோ? நிகழுமேல் எக்காலமும் உலக மக்கள் வருந்தும் பொருட்டு இயேசுவைப்போல் காந்தியும் உயிர்த்தெழ மாட்டாரா?

"Unity," Chicaco.

### ஜேர்மனியின் புதிய வாழ்வு

ஐரோப்பிய மகாயுத்தத்தின் பயனால் வலிமை பொருந்திய சைனியத்தை இழக்க நேரிட்ட ஜெர்மனிதேசம் தற்போது புத்துயிர் பெற்று வருகிறது. இதனைக்குறித்து மிர் ஜ்யார்ஜ் மெக்லிலன் என்பவர் "கரண்ட் ஹிஸ்டரி" என்னும் அமெரிக்கப் பத்திரிகையில் ஓர் கட்டுரை வரைந்துள்ளார். அதில் ஒரு பகுதி அடியில் வருமாறு:—

ஜெர்மனிதேசம் பொருளாதார சரித்திரத்தில் ஒரு பெரிய பாடத்தை நமக்கு ஊட்டுகிறது. அது ஒப்புவமையற்ற போர்க்களப்பினால் நிலை குலைந்திருந்தும், பொருள் சம்பந்தமாயும் இயற்கை நிலை சம்பந்தமாயும் சீரழிவுற்றதாயிருந்தும், பணமில்லாக் குறையாலும் தேசீய வாதிகளின் நெருக்கடி

யாலும் அரசியலையே மாற்றியமைக்க வேண்டிய அவசர நிலை ஏற்பட்டிருந்தும் அதன் தேசிய நிர்மாணம் தற்கால வுலகில் ஓர் அதிசயமேயாகும். இது ஜர்மானிய இயல்புக்கும் நிலைமைக்கும் ஓர் ஞாபகார்த்தமு மாகும்.

ஜெர்மனி அடைந்திருக்கும் பொருளாதார வெற்றியின் முக்கியமான அம்ஸங்களை நாம் நெகிழவிடலாகாது. ஜெர்மனி பெற்றுள்ள கலைக்ஞானத்தின் பெருமையையும் நம்மால் மறுக்க இயலாது. ஒரு காலத்தில் கலைக்ஞானத்தில் தலைமைப்பதவி வகித்து வந்த ஜெர்மனிதேசம், ஒரு கூட்டம் இராணுவ வீரர்களின் செருக்கால் யுத்தாசை பிடித்தலைந்தது. அதன் ராணுவ முறையின் கொடுமை, அங்கு உண்டாகிய தேசிய வாழ்வை அசைய வொட்டாது ஸ்தம்பிக்கச்செய்தது.

புதிய ஜெர்மனியில் தற்போது பொது மக்களால் நடத்தப்படும் கலாசாலைகளையும் அரசாங்கக் கல்லூரிகளையும் உயர்வு படுத்துவதிலிருந்து ஓர் வித ஜனநாயக தத்துவக் கல்வி பரந்து வருகிறது. சர்வதேசங்களுக்கு வழிகாட்டியாக இருந்துவரத் தக்கதான ஓர் இலக்கியக் கலை ஸ்தானத்தை அது நிலைநாட்டி யுள்ளது. இளைஞர் இயக்கமும், பந்து விளையாடல்கள் போன்ற பலவித விளையாட்டுகளை உற்சாகப்படுத்தி வருவதால் மக்களின் புறவாழ்வுச் சீர்திருத்தமும், அதன் தேசிய வளர்ச்சியில் மிகவும் முக்கியமானதாகும். தவிரவும் அரசாங்கச் சட்ட விலக்குகள் ஏற்படாமலே சென்ற வருடம் மதுபானச் செலவில் 100-க்கு 25 வீதம் குறைவுபட் டிருப்பதும் நன்கு அறியத் தக்கது.

இராணுவத் திமிரிலிருந்து ஏற்பட்ட மாற்றம் ஜெர்மன் அரசியல் சபையை சில அம்ஸங்களில் நமது நாட்டைப் பார்க்கிலும் (நமது நாடு என்பது அமெரிக்காதேசம்) உயர்வான ஜன நாயகத்துவத்தில் அமைத் திருக்கிறது. அதன் கைத் தொழி லமைப்புகளில் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவமும், செலவிடுவோர்களின் பிரதிநிதித்துவமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹென்றி போர்டு போன்ற ஓர் தனி மனிதனின் ஆதிக்கத்திற்கு விட்டுவிடாது "குறுப்ஸ்" என்று சொல்லப்படும் ஒரு கூட்டத்தார்களால் நடத்தப்படுகின்ற பெரும் தொழில் நிலையங்களின் நிர்வாக சபையிலும், தொழிலாளர் பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. ஜெர்மனியின் பொதுவான பொருளாதார முன்னேற்றம் சென்ற வருடம் அது 100-க்கு 35 வீதம் அதிகமாகச் சேமித்து வைத்துள்ள பொருளிலிருந்தும் ஜெர்மனி ஒரு காலத்திலேனும் அடையப் பெற்றிராத 40 லக்ஷம் டன் எடைபெறும் புதிய வியாபாரக் கப்பல்களைக் கட்டி முடித்திருப்பதிலிருந்தும் நன்கு அறியத் தகும்.

"Current History," Newyork.

# ஆசிரியர் குறிப்புகள்.

## எமது உறுதி மொழி

"பாரதி" இன்று "நவீன பாரதி"யாக வெளிவர நேர்ந்து விட்டது. இனி "பாரதி"யின் அபிவிருத்திக்காகச் செய்துவந்த உதவிக ளனைத்தையும் "நவீன பாரதி"க்கு நல்கி அதன் வளர்ச்சியில் சிந்தனை செலுத்த வேண்டியது தற்போது, நமது வாசக நேயர் களுக்கும் சிறப்பாகத் தமிழ் நாட்டினருக்கும் கடமையாகும். அது அவஸ்யமு மாகுமென்றே உறுதியாகக் கூறுகின்றோம்.

சென்ற வருடம் "பாரதி"க்கு ஆசி வழங்கியவர்களில் திரு. கௌரி சங்கர் மிஸ்ரா அவர்கள், "பாரதி" சுதந்திரத்திற்காகவே பிறக்கட்டும், "பாரதி" சுதந்தரத்தற்காகவே இருக்கட்டும், "பாரதி" அவஸ்யமானால் சுதந்தரத்திற்காகவே இறக்கட்டு" மென்று அன்று கூறியது இன்றும் ஒலித்துக்கொண் டிருக்கின்றது. அவ் வாசகத்திற் கண்டதில் சிறிதும் குறைவிலாது "பாரதி" அன்று முதல் அவ் விதமே வெளிவந் திருக்கின்ற தென்பதைத் தற்கால அறிவுலகுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ப தில்லை. இவ் விதமாகவே ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் தேசியப் போரின் வேகத்தால் தம் மையே அர்ப்பணம் செய்து தேச விடுதலை கோரி, பத்திரிகைத் தொண்டோடு வெளித் தொண்டும் அல்லும் பகலுமாக ஆற்றி அதன் பலனைத் தற்போது (வட ஆர்க்காடு ஜில்லாவில் வேலூரிலுள்ள மத்திய சிறைச் சாலையில் (B. Class) பி. வகுப்பில் 2007. நிர் கைதியாக இருந்து) தேசீயத் தவம் புரிந்து வருவதைத் தமிழுலகம் நன்கறியும்.

"பாரதி"யின் ஆசிரியர் சிறை செல்லு முன்னர், தாம் சிறை சென்றாலும் மாலிகையை வெளியிட வேண்டி முன்னேற்பாடாய்ச் செய்திருந்த முயற்சிக ளனைத்தும் பயன்பெறு தொழியவே, பின்னால் "பாரதி" சற்றும் தயங்காது வெளி வருவான் வேண்டி மேற்

கொண்ட பெருத்த முயற்சிக ளெல்லாம், மிகக் காலதாமதத்தையும் அசௌகரியத்தையும் மிகுந்த பணச் செலவையும் கொடுத்து வந்த தால் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு "நவீன பாரதி" யென வெளி யிட நேர்ந்தது. அது பற்றி அன்பர்கள் வேறாக எண்ணாது நமது உள்ளக்கிடக்கையின் உண்மையை யிதன் வாயிலாய் அங்கிகரிப்பீர்க ளாக.

நாட்டில் எங்கும் விஷயங்கள் நவீனம் நவீனமாக நிகழ்ந்து வரும் போது "பாரதி"யும் தனக்காக "நவீன பாரதி"யால் தொண்டாற்ற முன் வந்தது, தேவி பாரதியின் கருணைத் திருநோக்கோ திருவருளின் நற்றுணையோ என எண்ணி மிக மிக மகிழ்கின்றோம். சென்ற 3 மாதங்களாகத் தனது ஒளியைச் சேமித்து வைத்திருந்த "பாரதி" இன்று அவைகளை மிகவும் ஆனந்தத்துடன் தன்னாட்டாருக்கு அளிக் கிறது. இந்தியாவின் உயரிய எண்ண மெல்லாம் நாளுக்கு நாள் விரிந்து பரந்து மலருங்காலையில், ஒவ்வொரு இந்தியனும் தனது சுக போக பாக்கியங்களைத் துறந்து வரும் இக் காலையில் "பாரதி"யின் தொண்டும் அவஸ்யமாகவும் அவசரமாகவும் வேண்டப்படுவதாகும் என்பதே நமது துணிபாகும்.

நமது ஆசிரியரவர்கள், தேசிய இயக்கமே கொள்கையாகி எப் பொழுதும் எழுதுவதும், படிப்பதும், சிந்திப்பதும், பேசுவதும் அதுவாகி ஒய்வென்பதையே யறியாது அல்லும் பகலும் சலியாது உழைத்துத் தமது தேசியக் கொள்கையையே பத்திரிகை வடிவாக்கி, அதன் உறுப்பினர்களை யெல்லாம் ஊக்கி, போஷகர்களை யெல்லாம் சந்தோஷமாக்கித், தொண்டர்களை யெல்லாம் உற்சாகித்து, நண்பர்களை யெல்லாம் களிப்பித்து "பாரதி"யைத் தேசிய இலக்கியப் பொக்கிஷ மென வளர்த்துக் காத்துத் தற்போது சிறையில் தேசிய விடுதலை வேண் டித் தவம் புரிந்து வருகின்றார். அவர் வெளி வரும் பரியந்தம் அவர் தம்முடன் "பாரதி"யும் ஓய்வு எடுத்துக் கொண்டதாகவே அன்பர்கள் கருத வேண்டிய திருக்கும். "பாரதி" பிறந்த இச் சின்னஞ் சிறு பிராயத்திற்குள் தேசத்தாரின் கவனத்தைக் கவர்ந்து நாட்டில் ஒப்பற்று விளங்கிய தொன்றே அதன் உயரிய உழைப்பின் தன்மையை விளக்குவ தாகும். அன்பர்களின் அரிய கவனத்தில் நிறைந்து நின்ற "பாரதி" திடீரென மறைந்துவிடா வண்ணம் அதன் அரிய சேவையை முன்னிலும் பன்மடங்காகத் தாயகத்தில் பரப்பும் பொருட்டாய், போஷக கனவான்களின், சந்தா நேயர்களின் நன்றியைப் பேணுங் காரணமாய், ஓர் தேசிய பத்திரிகையின் மேன்மையை நாட்டின் பெயரால் நிலை நாட்டும் நிமித்தமாய், தேவி "பாரதி"யின் தளை யகற்ற வேண்டிக் கிடந்து தவிக்கும் தேசத்தோ டொத்துச் சேவை

புரிய எண்ணியே யிப்போது "பாரதி," "நவீன பாரதி" எனப் பரிணமித் திருக்கிறது என்பதை எமது அரிய அன்பர்களின் பெரிய ஞாபகத்திற்குத் தருகிறோம். தேவி "பாரதி"யின் அருள் "நவீன பாரதி"யின் மீது பொங்கிப் பொலிவதாக. அன்பர்களின் அபிமான மிக்க ஆதரவும் அதிகம் அதிகமாய் வந்து மென்மேலும் ஊக்குவ தாகுக.

"பாரதி"க்காகத் தோன்றிய "நவீன பாரதி"யின் ஆசிரிய பீடத்தை யேற்கும் பாக்கியத்திற்குச் சிறிதும் பரிபக்குவ மெய்தாப் பான்மையேமாயினும், "பாரதி" ஆசிரியரவர்களின் ஆக்ஞையை மறுக்க முடியாததொன்று; "பாரதி"யினிடம் இயல்பா யெமக் குதித் துக்கொண் டிருந்த அன்பை அகற்றி வாளா இருக்க முடியாதது மற்றொன்று; இன்னு மொன்று, அன்றொருக்கால் திரு. ஆசிரியரவர் களுக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தையும், வாசகர்களுக்கு விடுத்த உறுதி மொழியையும் நேரிய வழியில் நிறைவேற்றிவர வேண்டியது ஆகிய இக் காரணங்களினால் இவ் ஆசிரிய ஸ்தானத்தை அவசியம் ஏற்றுத் தீர வேண்டியதாயிற்று.

பிரிய மிக்க நண்பர்களெல்லாம் "பாரதி" தயங்கியதை முன் னிட்டு எப்படி யெப்படியோ எண்ணி மனமுடைதல் கூடும். தேவியின் எண்ணம் வேறாக இருக்கும்போது எம்மால் என்செய்ய முடியும். முன்னொருக்கால் "பால பாரதி" தோன்றித் தன் ஒப்பற்ற ஆசிரியரையும் உண்டு ஒழிந்தது! இன்று "பாரதி"யோ தனது ஆசிரியரைத் தவக் கோட்டமாகச் சிறைச் கோட்டத்தினுட் செலுத்தி யிருக்கின்றது. எனினும், தனக்குப் பிரதியாக "நவீன பாரதி"யை அனுமதித்து விட்டதால் உண்மையில், நவீன என்ற ஒரு சொல்லும் ஆசிரியரின் பெயருமே மாற்ற மன்றிப் பிறி தொன்றுங் காணமுடி யாது. அவ்விதமாக "பாரதி", "நவீன பாரதி"யாகவே வெளிவர நேர்ந்ததால் இனிக் கவலைக்குச் சிறிது மிடமில்லை. பத்திரிகையின் வளர்ச்சியே குறியாக, அதன் அபிவிருத்தி மென்மேலும் ஓங்குமாறு நண்பர்களின் துணைக் கொண்டும், போஷகர்களின் பெருக்கங் கண்டும், எம்மையே யிதற்கென அர்ப்பணம் செய்கின்றோம். "நவீன பாரதி" காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்ற முறையில் "பாரதி"யினும் விரிந்து வெளிவந்து களிப்பிப்பதா யிருக்கும். தேவி பாரதியின் கிருபையால் "பாரதி" ஆசிரிய ரவர்கள் வெளியுலகில் வந்து மீண்டும் ஆசிரிய பீடாதிபத்தியம் வகிக்கும் வரையும் "நவீன பாரதி"யானது நமது ஆசிரியாதி பத்தியத்தின் கீழே நடைபெற்று வருமாகையினால் சந்தா நேயர்களாகிய அன்பர்களும் போஷகர்களும் "பாரதி"யாகவே இதனையும் பாவித்து அபிமானித்து எமது நோக்கத்தையும், திரு.

ஆசிரியரவர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றி இத் தேசீய நற்றொண்டை நிறைவேற்றப் பற்பல உதவிகளைப் பல்வேறு வழிகளாலும் புரிந்து இதனை வளர்த்து ஆதரிப்பீர்க ளென்று ஆசிக்கின்றோம். சந்தா நேயர்களின் பெருக்கத்திலேயே யிதன் பெருக்கம் அடங்கி யிருக்கிறது; அன்பர்களின் ஆதரவின் வளர்ச்சியிலேயே யிதன் வளர்ச்சி தங்கி யிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## போஷக கனவான்களுக்கு

நாட்டிற்கு "பாரதி" போன்ற உயரிய தேசீய மாஸிகைகளின் அவஸ்யத்தையும் அவசரத்தையும் அருமையையும் அநேகமா யோர்ந்து பத்திரிகாபிமானத்திற் சிறந்து "பாரதி"க்குக் காலமும் இடமும் தகுதியும் நோக்கிப் பெரும் பொருள் ஈந்து உதவி "பாரதி"யின் வளர்ச்சியிலும் வருகையிலும் அபிமானக் கண் கொண்டு காத்து வந்த அன்பார்ந்த போஷக கனவான்களுக் கெல்லாம் எமது மனமார்ந்த நன்றி யறிதலோடு பிரிய வந்தனத்தையும் வழங்குகிறோம். அது போலவே தங்கள் "பாரதி"யின் புனர் ஜனனமாகிய இந்த "நவீன பாரதி"யையும் பாவித்துப் "பாரதி"க்குக் கொடுத்து உதவியதோடு தங்கள் கடமை அமைந்தது என்று கருதிவிடாது நவீன காலத்திற் கேற்ப நவீனமான துறைகளில் இறங்கி நவ நவமான வேலைகளை நாட்டிற்கு நாட்டமோடு உழைக்க நாடி வந்திருக்கும் இந் "நவீன பாரதி"க்கும் தங்கள் பாராட்டத்தக்க உயரிய உதவிகளை மேலும் உதவுவதோடு தங்கள் அன்பு மிக்க நேயர்களையும் இதற்குப் போஷகர்க ளாக்கி உதவும்படியாக அனேக வந்தனத்தோடு கேட்டுக்கொள்கிறோம். "நவீன பாரதி"க்குச் செய்வது நாட்டிற்குச் செய்வதேயாகும். நாடோடு "நவீன பாரதி"யும் தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றன. "நவீன பாரதி"யால் நாட்டிற் கேதேனும் நலன் விளைந்திருக்கு மென்றால் அது தங்களால் விளைந்ததாகவே ஒப்புக் கொள்ளல் வேண்டும். ஆதலால் "நவீன பாரதி"யின் வளர்ச்சி தங்கள் கைவசம் அமர்ந்திருப்பதால், எமது வேண்டுகோளை ஒவ்வொரு போஷகப் பெரியார்களும் அங்கீகரித்து "நவீன பாரதி"க்கு இச் சந்தர்ப்பத்திற் கேற்ற தகுதி வாய்ந்த உதவிகளைப் புரியுமாறு கேட்டுக் கொள்கிறோம். எமது ஒவ்வொரு போஷகரும் குறைந்தது ஒவ்வொரு போஷகருக்குக் குறையாது சேகரித்து உதவ வேண்டுமென்பதே எமது கோருதலாகும். எமது இக் கோரிக்கையில் தாங்கள் சற்றே மனம் வைத்தால், அது தங்கள் ஆஸ்திக்கும் அந்தஸ்துக்கும் தகுதிக்கும் செய்து கொடுப்பதற்கு ஓர் அரிய காரியமன்று. ஆதலால் இந்தப் பேருதவியைத் தங்கள் கையில் நின்றும் இவ்வாண்டில் எதிர் பார்க்கிறோம்.

## சந்தா நேயர்களுக்கு

சென்ற 3½ மாதங்களில் "பாரதி"யின் தாமதத்தைக் குறித்து வரப்பெற்ற கடிதங்களுக் கெல்லாம் தனித் தனியே கடித மெழுதிச் சாந்தி செய்ய வாய்க்காமல் ஓரிரு சமயம் பத்திரிகைகளின் வாயிலாகப் "பாரதி"யின் நிலைமையைக் குறித்து அறிவிக்கப்பட் டிருந்தது நேயர்கள் கண்ணுற் றிருக்கலாம். "பாரதி" வெளி வராத நாள் முதல் இம் மாதம் 15-ம்உ வரை பெரும்பாலும் வெளி யூர்களிலேயே தங்கி "பாரதி" மீண்டும் விரைவில் வெளிவர வேண்டிய முயற்சி களின் மேல் இடை விடாது சென்றுகொண் டிருந்ததால், இங்கு மேலும் மேலும் கிடைக்கப் பெற்ற லிகிதங்களுக் கெல்லாம் தனித் தனியே கடிதங்கள் விடுக்க இயலாது போயினமைக்கு மிகவும் உளம் வருந்துகின்றோம். "பாரதி"யை அன்போடு ஆதரித்த அன்பர்களை யெல்லாம் "நவீன பாரதி"யையும் ஆதரிக்குமாறு விரும்புகிறோம். "பாரதி"க்கு அபிமானத்தோடு அநேகம் அநேகமான சந்தாதார்களை ஆங்காங்கு அயல் நாட்டிலும் உள் நாட்டிலுமாகச் சேகரித்து உதவிய உதவியாளர்களுக் கெல்லாம் எமது மனமுவந்த நன்றியறிதலை வணக் கத்தோடு நல்குவதுடன் தங்கள் தங்கள் பத்திரிகாபிமானத்தைப் "பாரதி"யின் மீது பதித்து வந்த அபிமானத்தை, உழைப்பை, உழைப்பின் உதவியை இந்த "நவீன பாரதி"யின் மீதும் வினியோ கித்துப் பழைய சந்தா நேயர்களோடு மேலும் புதிய நேயர்களையும் சம்பாதித்து உதவுமாறு மிக மிக வணக்கத்தோடு கேட்டுக்கொள்கிறோம்.

பிரிய உதவியாளர்களே,

நீங்கள் உதவிய 1930ஆு சந்தா, டிசம்பர்மீ முடிய முடிவடை கிறது. ஆனால், "பாரதி"யில் ஜனவரிமீ முதல் ஜூலைமீ வரை சஞ்சிகைகள் 7 தான் வந்திருக்கின்றன. இந்த "நவீன பாரதி"யின் நவம்பர்மீ டிசம்பர்மீ சஞ்சிகை 2-யும் சேர்த்து ஆக 9 சஞ்சிகைகளே யாகும்போது எப்படிச் சந்தா முடிவடைந்து விட்ட தென்று கேட்கலாம். அஃது உண்மையே எனினும், 3 மாதம் சஞ்சிகை வெளி வராது போய்விட்டதிற்காக அனுபந்தம் ஒன்று அச்சிட்டு உதவுவதாக எண்ணியுள்ளோம். அதனைப்பற்றிய முழு விபரமும் டிசம்பர்மீ அல்லது ஜனவரிமீ சஞ்சிகையில் காணலாம். இம் மாதம் பிற்பகுதி யிலேதான் "நவீன பாரதி"யை அச்சிட ஆரம்பித்ததினால், எல்லாம் அவசரம் அவசரமாக நடைபெற வேண்டியதாயிற்று. ஆகையினால், இதற்காக அன்பர்கள் ஆயாசமடையாது, வெளியாகும் மாஸிகையில் கண்டுகொள்ள மனமிசைந்து தங்கள் தங்கள் 1931ஆு சந்தாவைத் தயவு செய்து உடனே அனுப்பி வைப்பீர்களென் றெதிர்பார்க்கிறோம்.

## அயல் நாட்டுச் சந்தா நேயர்களுக்கு

பிரிய சகாயர்களே,

பினங்கு, சிங்கப்பூர், மலேயா, பீஜி, தென்னாப்பிரிக்கா முதலிய தூர தேசங்களிலிருந்து செய்தி யறியவோ அனுப்பவோ 10, 15 நாட்கள் கிட்டத்தட்ட 3 வாரங்கள் ஆகின்றன. ஆதலால் இப்பொழுதே தெரியப்படுத்தினு லல்லாது வேறு வழியில் குறித்த காலத்தில் தங்கள் சந்தா வந்து சேரவும் உரிய காலத்தில் பத்திரிகையை அனுப்பவும் உதவியாயிருக்கு மென்பதை எண்ணியே இப்போதே இதனைத் தெரிவிக்க வேண்டிய தவசியமாயிற்று. அன்பர்கள் எமது வேண்டுகோளுக் கிசைந்து முன்னதாகவே அன்போடு அனுப்பும் மணியார்டர்களையோ போஸ்டல் ஆர்டர்களையோ இன்சூர் முதலிய பண சம்பந்தமான யாவற்றையும் மானேஜர், "நவீன பாரதி," உத்தமபாளையம். என்ற விலாசத்திற்கே அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

## சட்டசபை சென்ற போஷகர் இருவர்

நமது 'பாரதி'யின் போஷக கனவான்களில் போடிநாயக்கனூர் ஜமீன்தார் திருமிகு. T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்களும், திருவாளர். ராவ்ஸாகேப் A. S. அழகணன் செட்டியார் அவர்களும் இவ் வருடம் சென்னைச் சட்டசபையில் அங்கம் பெற்று அமர்ந்திருக்கின்றனர். இவர்கள் "பாரதி"யின் உண்மையான சேவையில் மனமுவந்து இதனை அன்போடு ஆதரித்து வந்ததொன்றே யிவர்கள் தேசாபிமானத்தைத் தெரிவிக்கின்றது. இவர்களின் தொண்டு தேசத்திற்கு நலம் பல புரியும் வழியில் நிகழ்வதை யெதிர்பார்க்கின்றோம்.

## சிறை வாழ்வும் பெண்கள் கஷ்டமும்

இந்திய நாட்டிலே பெண்களே முதலில் மதிக்கத் தகுந்தவர்கள் என்பதை யிப்பொழுதே பிற தேயத்தினர் அறிந்து வருகின்றனர். இந் நிலையிலிருக்கும்போது அயோக்கியர்களில் சிலர், சிறையிலுள்ள விசாரணைக் கைதிகளான பெண்மணிகளைத் தம் இழிந்த போக்கிற்கு இலக்காக்கத் துணிந்த செய்தி யறிந்து எமது நெஞ்சம் திடுக்கிட நேர்ந்தது. இவ் வருட ஆரம்ப முதலே பெண்கள் தேசிய இயக்கத்தில் மிகுதியும் சம்பந்தப்பட்டு ஏறக்குறைய எக் கூட்டத்திலும் எல்லாவித மறியலிலும் ஆடவரோடு சரிபாதி யென்று சொல்லும் நிலைமைக்குப் பங்கு பெற்று விட்டார்கள். "சுதந்திரமே எமது பிறப்புரிமை; அதனை யடையும் பரியந்தம் ஓயோம்" என்று சொல்லிக்கொண்டு போர்

செய்து வரும்போது, பம்பாயில் சென்ற மாதம் நடை பெற்ற தேசியக் கொடியேற்று விழாவின்போது தங்கள் தங்கள் நிலைமைகளை யெல்லாம் உதறித் துறந்து அன்னை பாரதியின் தொண்டே, செய்யத் தக்க அரும் பணி யென்று கொண்ட வனிதா ரத்னங்களை நிரபராதியான சகோதரிகளை சில போலீசாரும் சார்ஜெண்டுகளும் கைப்பிடித் திழுத்தும் தேகத்தைத் தொட்டும் மானபங்கம் செய்தன ரென்பதை யறிய ஒவ்வொரு இந்தியரின் மனமும் புண் படுகின்றது. இந்தியாவில் இந்தியருக்கு விரும்பப்படுவ தெல்லாம் தங்கள் உயிர் போன்றுள்ள மதமே பிரதானம். மதத்தின் தேவதைக ளெல்லாம் பெரும்பாலும பெண்களே. இன்று காலத்தின் வேகத்தால், நாடிழந்து செல்வமிழந்து மனைவி ஓர் சிறையி லிருக்கவும், புத்திரன் பிறிதோர் சிறை நண்ணவும், தான் ஓர் சிறை செல்லவும், புத்திரியும், மற்றோரும் தனித் தனியே சிறையிற் கிடந்து வாடவும் நேர்ந்திருக்கும்போது, தங்கள் மானத்திற்கும் பங்கம் நேரிடுவதா யிருந்தால், இந்தியர் தம் நிலைமை எண்ணத்தான் படுமோ! சொல்லத்தான் படுமோ!! இக் கயவர்கள் செயலைக் கண்டித்துப் பம்பாய் பொது ஜனங்கள், பம்பாய் ஷெரீபுக்கு இச் செயலைக் கண்டிக்க வேண்டிப் பொதுக் கூட்டம் கூட்டி நியாயங் கிடைக்க வேண்டிக் கொள்ளவும், கவர்னரின் அனுமதி கிடையாமற் போகவே ஷெரீபும் ஜனங்களுடன் சேர்ந்து வருந்துவதன்றி வழிகாணு தவராயினர். பம்பாய் கார்பரேஷன் பிரஸிடெண்டும் இச் செயலைக் கண்டித்துக் கவர்னருக்கு எழுதியும் பயனில்லாத விடையே கிடைத்ததினால், வெறுங் கண்டனக் கூட்டங்களே மிகுதியும் ஏகோபித்த அபிப்பிராயம் பெற்று நிறைவேறி யிருக்கிறது. தேசியத் தொண்டாற்றும் பெண்க ளியக்கத்திற்குமட்டு மல்லாது, போராட்ட மொவ்வொன்றுக்கும் தலைமை வகிப்பதெல்லாம் தற்போது பெண்களாகவே யிருந்து வருகிறார்கள். இவ் வியக்கத்தில் தலைமை வகித்துச் சிறை சென்றவர்களில் பெரிதும் செல்வமுடைய சீமாட்டிகளும். கலை நிரம்பிய அறிஞைகளுமே சென்றுள்ளார்க ளென்பதை அரசாங்கம் அறியும். ஆனால் என்ன காண்கிறோம்? எது எது நடந்தாலும் சரியே எனது அடிப் பீடத்தை அசைக்க முடியா தென்று அரசாங்கம் கருணை செலுத்தாது சாதனையுடனிருந்து வருவதின் போக்கைப் பற்றி மிகுதியும் வருந்தி பல ஆங்கில அறிஞர்கள் மனம் புழுங்கிக் கதறிக் கதறித் தம் மரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்கின்றனர். அவர்கள் செயலெல்லாம், இந்திய அரசாங்கத்திற்குச் செவிடன் காதில் ஊதிய சங்கு நாதமே போலாகிவிட்டதுந் தவிர, பார்லிமெண்டாரின் கூத்துக்களையும் கண்டு இன்று அலறி வருகின்றார்கள். பொறுத்திருந்து பார்க்க யாவரும் காத்திருக்கின்றனர். சமீபத்தில் யாவும் வெளியாகிவிடும் அறிகுறிகள், தற்போது நடைபெற்று வரும் வட்ட மேஜை மகாநாட்டின் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

## பத்திராதிபர்களுக்கு

"பாரதி"யின் ஆசிரியர் சிறைப்பட்ட வுடன் "பாரதி"யின் சம்பந்தமாகவும், திரு. ஆசிரியரவர்கள் விஷயமாகவும் அப்போதைக் கப்போது விடுத்த அறிக்கைகளை அங்கீகரித்துத் தமது பத்திரிகைகளி லெல்லாம் பிரசுரித்த தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களுக்கும் அயல் நாட்டுத் தமிழ்ப் பத்திராசிரியர்களுக்கும் மிக்க நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். பத்திரிகை யுலகில் ஒவ்வொரு பத்திரிகை யும் கட்சிப் பிரதி கட்சிக் கொள்கை யுடைய பத்திரிகையே ஆயினும், தொழில் முறையில் எக் கட்சிப் பத்திரிகையும் ஒன்றே யென்பதை யறிந்து பல் வேறு கட்சிப் பத்திரிகைகளும் முறையாகவும் சகோதர பான்மையாகவும் நடந்து கொண்டதற்கு மகிழ்வுடன் வந்தனமும் செலுத்துகின்றோம்.

## ஹிந்தி பாஷையும் "பாரதி" ஆசிரியரும்

சிறை வாசத்தி லிருந்து வரும், திரு. ஆசியரவர்களை இம் மாதம் 8உ கண்டு பேசியபோது, சந்தோஷமாகவும், சௌக்கியமாகவு மிருந்து வருவதாகவும், சிறை யதிகாரிகள் பட்சமாகவே நடந்துகொள்வ தாகவும், குறை சொல்ல இடமில்லை யென்றும் சொல்லியதுடன், தாம் கற்று வரும் ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் மலையாளம் ஆகிய 4 பாஷை களில் ஹிந்திக்கே பெரும் பொழுதைச் செலவிடுவதாகவும், அதுவே தேசப் பொதுப் பாஷையாக அமையப் போவதால், இந்தியர் ஒவ் வொருவரும் அறிந்து அதில் வன்மை யுடையவர்களா யிருக்கவேண் டிய தவஸ்யமாகையினால், "பாரதி"யின் வாசகரனைவரும் வருங்கால இந்தியாவின் ராஜீய தேசீய விஷயத்தில் தாராளமாகக் கலந்து கொள்ள ஹிந்தியைக் கற்றுத் தேர்ச்சியடையுமாறு விரும்புவதாக அறிவித்தார்.

ஹிந்தி, தேசீய பாஷை யாகிவிடு மாதலால், அவஸ்யம் ஒவ்வொரு வரும் கற்றிருக்க வேண்டியதாகும். தேசத்தில் ஹிந்தி பேசுகின்ற வர்களே அதிகத் தொகையின ரென்பது தெரிந்த விஷயம். இம் மாகா ணத்தில்தான் பெரும்பாலோர் ஹிந்தி யறியாதவர்களா யிருக்கிறார்கள். மற்ற மாகாணங்களில் அவஸ்யம் ஹிந்தி ஒவ்வொருவருக்கும் தெரிந் திருக்கும். ஆகையினால் யாவர்களும் ஹிந்தி கற்றுக் கொள்ளவேண்டும். ஆரம்ப பாடசாலைகள் முதல் உயர்தரக் கலாசாலைகள் வரை ஹிந்தியை அவசிய பாடமாகவும் அமைக்கவேண்டும். இதில் ஹிந்தி பிரசார சபை நன்கு வேலை செய்யவேண்டும். மற்றைய சங்கங்களும் இதற்குப் பக்க பலமாய் நின்று சகாயம் புரிய வேண்டும். தென்னாடு முழுதும் இனிமேல் ஹிந்தி பாஷை தினே தினே பெருகுமாறு செய்தலை ஒவ் வொரு தமிழ் மகனும் தத்தம் கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

---

19853

# "நவீன பாரதி"

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | $\frac{1}{2}$-க்கு | ,, | ,, | 5—0—0 |
| ,, | ,, | $\frac{1}{4}$-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4ல் | ,, | ,, | 20—0—0 |

$\frac{1}{4}$ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

# வியாபாரத்திற்கு அழகு

# விளம்பரஞ் செய்தல்.

# “நவீன பாரதி”

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசிய மணங் கமழும்

## ‘நவீன பாரதி’க்கு

உடனே சந்தாதார்களாய்ச் சேருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக் கொடுங்கள்.

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள்நாடுகளுக்கு வருடத்திற்கு | ரூ | **2—0—0** |
| வெளி நாடுகளுக்கு ” | ரூ | **2—8—0** |

அல்லது **4** ஷிலிங்

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணா 4. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக. விரும்புவோர் எழுதவும்.

போறுப்பாளர்,
**“நவீன பாரதி” ஆலயம்,**
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Printed, Edited and Published by R. SUBRAMANYAM,
at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.